**அசல் வழக்கு எண் : 41/2019**

**நாள்: 21.07.2026**

**வா.சா.2 - முத்துராமலிங்கம், த/பெ. தேவன்**

**இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர். இரு தரப்பினரும் ஆஜர். 3ம் பிரதிவாதி ஆஜர். 1ம் வாதி ஆஜர்.**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.2 ன் குறுக்கு விசாரணை**

1) நான் வசிக்கும் இடம் சேலம் மாவட்டத்தில் உள்ள காடையாம்பட்டி வட்டம், ராமமூர்த்தி நகர் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதிகள் யார் என்றால் ஆசம்கான் என்பவரின் மக்களாவர். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான பசீரா என்பவர் யார் என்றால் நடராஜன், பெருமாள் (இவ்வழக்கின் பிற பிரதிவாதிகள்) அவர்களுடன் இணைந்து தாவா சொத்துக்குறித்து பிரச்சினை செய்தவர்கள்.

2) தாவா சொத்தானது எங்கு அமைந்துள்ளது என்றால் பொம்மிடியில் உள்ள மஜீத் தெருவில் உள்ளது. வழக்கு சொத்தானது எத்தனை சென்ட் நிலம் என்பது தெரியுமா என்றால் சுமார் 9-1/2 ஏக்கர் நிலமானது பிரச்சினைகுரியதாகும். அதில் கட்டிடம் உள்ளதா என்றால் உள்ளது. தார்சு கட்டிடமா, வில்லை கட்டிடமா என்றால் தார்சு கட்டிடம் ஆகும். மேற்படி கட்டிடமானது எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால், அது எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி 9-1/2 ஏக்கர் நிலத்திற்குள் தான் எனக்கும் கட்டிடம் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

3) மேற்படி எனக்கு பாத்தியப்பட்ட கட்டிடத்தை நான் எப்போது விலைக்குப்பெற்றேன் என்றால் எனது மனைவி அமீர்பாய் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார். மேற்படி கிரய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது.

4) இவ்வழக்கின் வாதிகளின் தந்தை அமீர்கான், எனது குடும்ப நண்பர் என்றால் சரிதான். அவருடைய கட்டிடம் எனது கட்டிடத்திற்கு அருகிலேயே உள்ளது என்றால் சரிதான். அவருடைய கட்டிடமும் பிரச்சினைக்குரிய 9-1/2 ஏக்கர் நிலத்தில்தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெறவில்லை என்றால் சரிதான். வாதிகள்தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். வாதிகள் கேட்டுக்கொண்டதன்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்கு தெரிந்ததை கூறுகிறேன்.

5) என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை (முதன்மை விசாரணை வாக்குமூலம்) நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை என்னால் கூற இயலுமா என்றால், தற்போது இயலாது. நான் வாதிகளின் குடும்ப நண்பர் என்பதாலும், அவர்கள் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

SARANYA M

Digitally signed by SARANYA M
Date: 2026.07.21 18:21:30 +0530